# துறையூர் நகராட்சி

2023-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29.12.2023 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் கீழ்க்கண்ட பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய சாதாரண கூட்டத்தின் நடவடிக்கைகள்.

முன்னிலை நகர்மன்றத்தலைவர்
துறையூர் நகராட்சி

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 29.12.2023 | 01 | துறையூர் நகராட்சிக்கு உட்பட்ட பேருந்து நிலைய வளாகத்தில் நகராட்சி நிலைய கழிப்பறை முதல் மெயின் சாலை (திருச்சி சாலை) வரை உட்புற பழுதடைந்த சாலையினை புதிய தார்சாலையாக மாற்றிட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**(ந.க.எண். 4074/2023/இ1)**<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:105 அனுமதிக் கப்பட்டது |
| 29.12.2023 | 02 | துறையூர் நகராட்சிக்கு உட்பட்ட பேருந்து நிலைய வளாகத்தில் பழைய நகராட்சி அலுவலகம் செல்லும் இடம் முதல் நகராட்சி பேருந்து நிலைய கழிப்பறை வரை உள்ள பழுதடைந்த பேருந்து நிலைய சாலையினை தார்சாலையாக புதிதாக அமைத்திட மதிப்பீடு ரூ.8.10 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**(ந.க.எண். 4073/2023/இ1)**<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்106 அனுமதிக் கப்பட்டது |
| 29.12.2023 | 03 | துறையூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் எண்.TN 48 AQ 1221, 207600 கி.மீ ஓடிய நிலையில் ஓட்டுநரால் குறிப்பிட்டுள்ள பழுதுகளை நாள்.20.11.2023ல் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று Oxina Cars Pvt.ltd., நிறுவனம் மூலம் ரூ.54287/- செலவில் பணி செய்து முடிக்கப்பட்டது என மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>ந.க.எண்.3145/2022/இ1<br>**அலுவலக குறிப்பு :**<br>பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்ற பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:107 அனுமதிக் கப்பட்டது |
| 29.12.2023 | 04 | . துறையூர் நகராட்சிக்குட்பட்ட விநயாகர் தெருவில் IHSDP திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள சமுதாய கூடம் நீண்ட காலம் பயன்பாட்டில் இல்லாத காரணத்தால் பராமரிப்பு இன்றி பழுதடைந்துள்ளது. அவ்வாறு பழுதடைந்த சமுதாய கூடம் கட்டிடம் பராமரிப்பு பணிக்கு ஆன மதிப்பீடு தொகை செலுத்த இசைவு என மாவட்ட மாற்று திறனாளிகள் நல அலுவலர், திருச்சிராப்பள்ளி அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>எனவே மாற்று திறனாளிகள் நலன் கருதி நகர்மன்றத்தின் அனுமதி பெற்று துறையூர் நகராட்சிக்குட்பட்ட விநாயகர் தெருவில் உள்ள சமுதாய | தீர்மான எண்:108 ரத்து செய்யப்பட் டது |

| | | | |
|---|---|---|---|
| | | கூடம் மாவட்ட மாற்று திறனாளிகள் நல அலுவலகம், திருச்சிராப்பள்ளி வசம் தற்காலிகமாக ஒப்படைப்பு செய்ய மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**ந.க.எண். 3903/2023/இ1**<br>**அலுவலக குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. சமுதாய கூடம் கட்டிடம் பராமரிப்பு பணிக்க ஆன மதிப்பீடு தொகை நிர்ணயம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 29.12.2023 | **05** | துறையூர் நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள கணினி, பிரிண்டர் மற்றும் இதர உபகரணங்கள் ஆண்டு பராமரிப்பு காலம் 31.07.2023 தேதியுடன் முடிவடைகிறது. மேலும் மேற்கண்ட நிறுவனம் கடந்த பராமரிப்பு விலை விகிதத்திலேயே ஒரு ஆண்டுக்கு பராமரிப்பு செய்து தர விருப்பம் தெரிவித்துள்ளதால் Sumaraj IT Solution நிறுவனம் ஒரு வருட (01.08.2023 முதல் 31.07.2024 வரை) காலத்திற்கு பராமரிப்பு மேற்கொள்ள அனுமதி மற்றும் அதற்கான தொகை ரூ.88,205/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>ந.க.எண்.2937/2016/இ1<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பராமரிப்பு தொகை ரூ.88,205/- பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:109 அனுமதிக் கப்பட்டது |
| 29.12.2023 | **06** | துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்களின் கடிதம் எண்.0830/அ8/2022, நாள்.12.04.2022-ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு தடுப்பு நடவடிக்கை பணிகளை உற்பத்தி கலன்களை அகற்றுதல், காய்ச்சல் ஏற்பட்ட நபர்களை கண்டறிதல், கணக்கெடுத்தல் போன்ற பணிகளை வீடுவீடாக சென்று மேற்கொள்ள 30 களப்பணியாளர்களை நியமித்துக் கொள்ள அறிவுறைகள் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சியில் டெங்கு களப்பணியாளர்கள் 30 எண்ணிக்கையில் சுய உதவிக்குழு மூலமாக பணிமேற் கொள்ளப்பட்டு வருகிறது. இதனை தொடர்ந்து நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி நாள்.24.02.2023-ன்படி 01.07.2023 முதல் 30.09.2023 வரை பணி மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் பொதுசுகாதாரம் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் வீடுகள், அரசு, அரசு சாரா அலுவலகக் கட்டிடங்கள் ஆகியவற்றில் மேற்கொள்ளவும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனையிலிருந்து காய்ச்சல் கண்டவர்களின் அறிக்கை பெறவும். பொதுமக்களின் நலன்கருதி தொடர்ந்து பணிபுரிய மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டது. மேலும், மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி 2019-20-ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி **ரூ.385/-** அடிப்படையில் **ரூ 9.50 இலட்சம்** மதிப்பீட்டில் மேற்காணும் பணியாளர்களுக்கு செலவினம் மேற்கொள்ளவும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை நிர்வாக நலன் கருதி 01.10.2023 முதல் 31.12.2023 வரை அல்லது ஒப்பந்தப்புள்ளி பணி உத்தரவு வழங்கும் காலம் வரை எது முன்னர் வருகிறதோ அதுவரையிலும் இச்செலவினத்தை வருவாய் நிதியில் செய்துகொள்ள மன்றத்தின் முன்அனுமதி வேண்டப்படுகிறது **(ந.க.எண்.1220/2022/எச்1)**<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>**1.** பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதியை மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:110 அனுமதிக் கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 29.12.2023 | **07** | துறையூர் நகராட்சியில் தட்டச்சர் பணியிடம் காலியாக உள்ளதால் அன்றாடம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்ப்டும் கடிதங்கள் தட்டச்சு செய்தல், நகர்மன்ற கூட்டப்பொருள் தட்டச்சு செய்தல் ஆய்வறிக்கை ஆகிய பணிகள் செய்வதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே 01.10.2023ம் மாதத்திற்கு முன் அனுமதியும், 01.11.2023 முதல் 30.11.2024 வரை 12 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் ஊதிய விகிதத்தில் அ1 பிரிவு, சி1 பிரிவு, எச்1 பிரிவு, எப்1 பிரிவு ஆகிய 4 பிரிவுகளில் தட்டச்சு செய்திட 4 பணியாளர்கள் பெற்று பணி செய்திட உத்தேச செலவினம் ரூ 13,00,000/- ஆகிறது. எனவே இப்பணியை செய்திட ரூ 13,00,000/- க்கு அனுமதி வழங்கிட மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.<br>**(அ.கு)**<br>அவசர அவசியம் கருதி 01.10.2023ம் மாதத்திற்கு முன் அனுமதியும், 01.11.2023 முதல் 30.11.2024 வரை 12 மாதங்களுக்கு தட்டச்சு பணி செய்திட அனுமதி வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.3689/2023/சி1** | தீர்மான எண்:111 அனுமதிக் கப்பட்டது |

ஒம்/-இ.செல்வராணி
நகர்மன்றத்தலைவர்

/உண்மை நகல் /

ஆணையர்,
துறையூர்நகராட்சி